**19.02.2026**
**MCOP.207/2023**
**எ.ம.சா.1. மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

விபத்து நடந்த நேரம், தேதி தெரியுமா என்றால் 01.08.2018, இரவு சுமார் 08.45 மணி இருக்கும். நான் எத்தனை மணிக்கு பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்தை எடுத்தேன் என்றால் இரவு 08.15 மணிக்கு திருத்துறைப்பூண்டியிலிருந்து எடுத்தேன். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவிலும், முதல் தகவல் அறிக்கையிலும் விபத்து நடந்த நேரம் இரவு 09.15 மணி உள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர் சாலை விதிகளை கடைபிடித்து ஓரமாக தான் சென்றார் என்றும், நான் தான் கவனக்குறைவாக சென்று மனுதாரர் மீது பேருந்தை மோதி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் சாலையை கவனமுடன் கடந்தார் என்றும், என்னுடைய அஜாக்கிரதையினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அது தவறு. மனுதாரருக்கு என்னுடைய கவனக்குறைவால் விபத்தை ஏற்படுத்தி காயம் ஏற்பட்டதால் எனது போக்குவரத்துக்கழகம் தான் மனுதாரருக்கு இழப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:- இல்லை.**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.